# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No.113/2021 |
| Deposition Of Witness for | : | PW.9 |
| Name | : | **திரு. Dr.நிர்மல் குமார்** |
| Father Name | : | திரு. செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25th July 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

நான் தற்பொழுது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் மூளைநரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணி புரிந்து வருகிறேன். கடந்த

01.10.2019 ல் தலைக்காய பிரிவில் பணியில் இருந்த போது உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த திரு.காளிதாஸ் 53 வயது என்பவருக்கு சிகிக்சை அளித்து அவர் குணமடைந்த பிறகு அவரை மருத்துவ சிகிக்சையில் இருந்து விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என சான்றளித்தேன். காயம்பட்ட காளிதாஸ் அவருக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும். அவருக்கு மூளையில் இருபுறமும் இரத்த கசிவு ஏற்பட்டு அந்த கசிவு குணமானவுடன் அவரை 03.10.2019 ல் விடுவித்தோம். என்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் காயம்பட்ட நபரான காளிதாஸ் என்பவரை முதன் முதலாக 01.10.2019ம் தேதியன்று தான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் அவருக்கு மூளையில் சிகிச்சை அளித்தேன் என்றால் சரிதான், மேற்படி மூளையில் சிகிக்சை அளித்திட எக்ஸ்ரே , ஸ்கேன் ஆகியவை எடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினாரா என்றால் ஆமாம். என்னை எந்த தேதியில் எங்கு வைத்து ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றால் நினைவு இல்லை. எக்ஸ்ரே, ஸ்கேன் குறித்த அறிக்கையை ஆய்வாளரிடம் நான் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எக்ஸ்ரே, ஸ்கேன் குறித்த அறிக்கையை பார்த்தால் மட்டும் தான் ஒரு காயமானது கொடுங்காயம் என சொல்லமுடியுமா அல்லது காயத்தை நேரடியாக பார்த்தாலே அது கொடுங்காயம் என சொல்லமுடியுமா என்றால் காயத்தை நேரடியாக பார்த்தாலே சொல்லமுடியும். எக்ஸ்ரே, ஸ்கேன் குறித்த அறிக்கையை பார்த்தால் மட்டும் தான் ஒரு காயமானது கொடுங்காயம் என சொல்லமுடியும் என்றும் வழக்கிற்காக காயத்தை நேரடியாக பார்த்தால் காயத்தைன் தன்னை குறித்து சொல்லமுடியும் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5ல் காயம்பட்ட காளிதாஸ்க்கு என்ன என்ன காயங்கள் ஏற்பட்டிருந்தன என சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாணை இல்லை**

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.25 18:17:20 +0530